சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 24.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 30/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | ஜின்ரிவ் டேனியல் |
| தந்தை பெயர் | : | டேனியல் ராஜ் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | அரசு மருத்துவர்,<br>திருவாரூர்<br>மருத்துவக்கல்லூரி<br>மருத்துவமனை |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளார்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். நான் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த 10.02.2021 ஆம் தேதி நான் பணியிலிருந்தபோது குடவாசல் போலீசார் விசாரணை செய்ய வந்தனர். அப்போது காவனூரை சேர்ந்த பொன்னன் மகன் நாகப்பன் என்பவர் எங்களுடைய மருத்துவமனையில் கடந்த 04.02.2021 ஆம் தேதி சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்று கேட்டனர். அப்போது மருத்துவமனையில் தற்போது உள்நோயாளியாக யாரும் இல்லை என தெரிவித்தேன். பின்னர் ஆவணங்களை பார்வையிட்டேன். அவ்வாறு ஆவணங்களை பார்வையிட்டதில் கடந்த 04.02.2021 ம் தேதி காலை 11.42 மணியளவில் எங்கள் மருத்துமனைக்கு மேற்சொன்ன நாகப்பன் சிகிச்சைக்காக வந்துள்ளார் என்பதும், அப்போது பணியில் இருந்த மருத்துவர் சக்திபாலன் என்பவர் அவரை உள்நோயாளியாக அனுமதித்துள்ளது தெரிய வந்தது. மேலும் நாகப்பன் என்பவர் மருத்துவமனையிலிருந்து தகவல் எதுவும் சொல்லிக்கொள்ளாமல் 10.02.2021 ஆம் தேதி வெளியே சென்றுவிட்டது தெரிய வந்தது. இது தொடர்பாக இந்த நாகப்பன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தபோது பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டினை பார்வையிட்டு காயச்சான்று வழங்கும் படி போலீசார் கேட்டபோது மேற்படி நாகப்பன் மருத்துவமனையை விட்டு சொல்லாமல் சென்றுவிட்டார் என்பதால் அவருக்கு உரிய காயங்கள் என்ன என்பதை பொருத்து என்னால் சொல்ல இயலாது என கருத்துரை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் கருத்துரை தான் நான் வழங்கிய கருத்துரை ஆகும். இது அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இந்த நாகப்பன் என்பவரை உள்நோயாளியாக நான் அனுமதிக்கவில்லை. அவருக்கு எந்த விதமான சிகிச்சையும் நான் வழங்கவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.24 16:20:47 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.